2014 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் வரலாற்றில் இடம் பெறுகின்றவண்ணம் கருணையோடும், காருண்யத்தோடும், வள்ளலாரை மிஞ்சுகின்ற அளவிலே உயிர்களைப் பாதுகாக்கின்ற வகையில், வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை அறிவித்த உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவியாக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த அமைதி, வளம், வளர்ச்சியோடு கூடிய புதிய பாராளுமன்றம் என்கின்ற வாசகத்தை அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளிலே எழுதிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

93—

மாசுக் கட்டுப்பாடு

***36220—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 பிப்ரவரி 20

(அ) சோழவந்தான் தொகுதி, மேட்டுப்பட்டி தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் கழிவுநீர் அப்பகுதியிலுள்ள கண்மாய் மற்றும் ஊருணியில் கலப்பதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனிதப் பாதங்களைப் பணிவுடன் வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, மேட்டுப்பட்டி தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் அறிவுரைப்படி சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர், ஆலையின் வளாகத்திற்குள் கரும்பு விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எந்தவிதமான கழிவுநீரும் கண்மாயிலோ, ஊருணியிலோ கலந்ததாக எந்தவிதமான புகாரும் பெறப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில், எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட வாடிப்பட்டியில் நீதிமன்றம் கட்டுவதற்கு நிலத்தை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றிகளைத் தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்து, தமிழகத்தை மின்மிகை மாநிலமாக உருவாக்கிடவும், தேசிய நதிநீர் உரிமைகளைப் பெற்று தமிழகத்தின் விவசாயம் வளம் பெற, இந்திய நாடு வல்லரசாக, தேசத்தின் பாதுகாப்பு, தேவைகள் நிறைவேற வலுவான மத்திய அரசும், வளமான தமிழ்நாடும், வலுவான இராணுவமும் வேண்டுமென்ற நிலையில் அதை இயக்கக்கூடிய அறிவு, கனிவு, துணிவு பெற்ற ஆற்றல் மிக்க ஒருவர்தான் நம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம் பாரத

2014 பிப்ரவரி 20]

நாட்டின் பிரதமராக வருவதன்மூலம் நாடு நலம் பெறும், ஏழைகளின் வாழ்வு வளம் பெறும். திட்டங்களும் சட்டங்களும் உருவாக்கிட, ஒருமைப்பாட்டை, வலுவான இந்தியாவை உருவாக்கிட, தெற்கு தேயாமல் காத்திட, தமிழ்நாட்டை இந்தியாவின் முதல் மாநிலமாக உருவாக்கிட, தொலைநோக்குத் திட்டங்கள் தந்துவரும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீரால் குடிநீர் மற்றும் விவசாயம் சார்ந்த கண்மாய் மற்றும் ஊருணிகளில் சுற்றுச்சூழல் மாசுபடுவதோடு தொற்றுநோய்கள் பரவும் நிலையும் இருந்து வந்தது. அதனை மாற்ற நல்ல நடவடிக்கை எடுத்து அங்கு கழிவுநீர் கலப்பதைத் தடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராக இருக்கின்ற காலமெல்லாம் சுற்றுச்சூழல் துறையின் பொற்காலம் என்ற வகையில் உலகளவில் பனியன் ஏற்றுமதியில் முதலிடம் வகித்துக்கொண்டிருக்கின்ற திருப்பூர் சாயப் பட்டறை உரிமையாளர்களுடைய கோரிக்கையை ஏற்று பொது சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்காக 200 கோடி ரூபாய் வட்டியில்லாத கடனாக (மேசையைத் தட்டும் ஒலி) தாயுள்ளத்தோடு வழங்கி, கடந்த ஆட்சியில் சாயத் தண்ணீர் ஓடிய நொய்யலாற்றில் சாகுபடித் தண்ணீரை ஓடச்செய்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தியாவிலேயே கழிவுநீர் வெளியேற்றத்தில் ஜீரோ டிஸ்சார்ஜ் என்று சொல்லக்கூடிய பூஜ்ய நிலையை அடையக்கூடிய திட்டத்தை தமிழகத்தில் செயல்படுத்திய முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்கிறேன்.

கூட்டுறவு ஆலைகளின் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து கழிவுநீரை ஆலையின் வளாகத்திற்குள் இருக்கின்ற காலி இடங்களில் கரும்பு பயிர் செய்து விவசாயத்திற்குப் பயன்படுத்த

வேண்டும் என்கிற அரசு உத்தரவை சம்பந்தப்பட்ட ஆலை முழுமையாகக் கடைப்பிடித்துக்கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சோழவந்தான் பேரூராட்சி, சமயநல்லூர், தேனூர் ஆகிய பகுதிகளில் கழிவுநீர் கலக்கின்றதா என குடிநீர் மாதிரி எடுத்து ஆய்வு செய்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

94—

நூலகம்

***28168—திரு. அ. சவுந்தரராசன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 34-வது வட்டம், எவரெடி காலனியில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து எனது பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாவட்டம், பெரம்பூர் தொகுதி, 34-வது வட்டம், எவரெடி காலனியில் கொடுங்கையூர் எவரெடி நகர் தொழிலாளர்கள் குடியிருப்போர் பகுதியில் பகுதிநேர நூலகம் வாடகையில்லா இலவசக் கட்டடத்தில் தற்போது செயல்பட்டு வருகிறது. மேற்படி, பகுதிநேர நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட யூனியன் கார்பைடு பணியாளர்கள் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் லிமிடெட் சார்பில் எவரெடி காலனியில் 2,556 சதுர அடி கொண்ட காலி மனை தானமாகப் பெறப்பட்டுள்ளது. புதிய கட்டடம் கட்டுவதற்கான திருத்திய வரைபடம் மற்றும் மதிப்பீடு